மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம்கூட மரியாதைக்குரிய அண்ணன் திரு. அன்பரசன் அவர்கள் கேட்டபோது சொன்னேன். அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது, கார்ப்பரேஷன் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க இடம் இல்லை. அதாவது, மாநகராட்சிப் பகுதிகளில் இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மக்களுக்குச் செய்வதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தை ஆய்வு செய்து, துணை மின் நிலையம் அமைக்க இடம் இருக்கிறது என்று சொன்னால், அதை நிறைவேற்றித் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல்

*8565—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, ஓட்டேரி 70-வது வார்டு, குக்ஸ் சாலையில் உள்ள தாய்-சேய் நல மையத்தினை 10 படுக்கை வசதி கொண்ட தாய்-சேய் நல மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2017 ஜூன் 23]

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதி, ஓட்டேரி 70-வது வார்டில் குக்ஸ் சாலையில் உள்ள தாய்-சேய் நல மையத்தை 10 படுக்கை வசதி கொண்ட தாய்-சேய் நல மருத்துவமனையாக மாற்றும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். "மனிதனுக்கு வாழ்வில் வளம் சேர்க்க வற்றாத செல்வம் இருக்கலாம். அவனுடைய ஆணையைக் கேட்டு நடப்பதற்கு ஆள், அம்புகள் இருக்கலாம். அதிகாரம் செலுத்தும் பதவியிலும் அமர்ந்திருக்கலாம். 'அறிவுடையோன் இவன்' என்று அறிஞர்கள் சொல்லும் கீர்த்தியும் இருக்கலாம். ஆனால், நோயற்ற வாழ்வு வாழ்வதாக அவனால் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. எனவே, வசதி படைத்தவர்களால்கூட நோயற்ற வாழ்வு வாழ்வதற்குச் சிரமம் இருக்கின்றபோது, சாதாரண, சாமானிய மக்கள் நோயற்ற வாழ்வு வாழ முற்படும்போது, அவர்களால் விரும்பி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்தான் கை கொடுக்க வேண்டும்" என்று தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சராக இருந்தபோது ஒரு முறை சொன்னார். அவர் சொன்னது எல்லா காலத்திற்கும் பொருந்தும். அதை அடிப்படையாக வைத்துதான் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்கின்ற மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள், சென்னை மாநகரத்தினுடைய மேயராக வீற்றிருந்தபோது (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையிலிருந்த தாய்-சேய் நல மையங்களைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, விரிவாக்கம் செய்தார். 40 ஆயிரம் அளவுக்கு மக்கள்தொகை இருந்தால், அங்கு ஒரு தாய்-சேய் நல மையம் உருவாக்கப்படும்*

என அறிவித்து, அதன் எண்ணிக்கையையும் உயர்த்திக் காட்டினார். அதன் விளைவாக, பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் அவரவர் வசிக்கின்ற பகுதியிலேயே மருத்துவம் பார்க்கின்ற வசதி ஏற்பட்டது. அதையும் தாண்டிச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அந்தச் சமயத்தில் சென்னையில் பிறந்த குழந்தைகளில் பெரும்பாலான குழந்தைகள் அண்ணன் தளபதி அவர்களால் உருவாக்கப்பட்ட தாய்-சேய் நல மையங்களிலேயே பிறந்தன என்பது வரலாற்றுச் செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த காலகட்டத்தில் மத்திய அரசாங்கம் இதற்கென வழங்கி வந்த நிதியை நிறுத்தியபோது, அண்ணன் தளபதி அவர்கள் அந்தத் திட்டம் முடங்கிவிடக் கூடாது என்பதற்காக, மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்து, அந்த அரிய திட்டத்தைச் செயல்படுத்தி, வெற்றிகரமாக நடத்திக் காட்டினார் என்பது வரலாறு. என்னுடைய திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, ஓட்டேரிக்கு அருகில் அமைந்துள்ள குக்ஸ் சாலையில் ஒரு தாய்-சேய் நல மையம் இருக்கின்றது. ஒரு மருத்துவர், 6 செவிலியர்கள், 1 Supervisor, Lab Technician, 1 Pharmacist, 2 அலுவலக உதவியாளர்கள் என்று அந்த மையம் இயங்கி வருகின்றது. அந்த மையத்தைச் சுற்றிலும் மேட்டுப்பாளையம், அருந்ததி நகர், வாழைமா நகர், புதிய வாழைமா நகர், பிரிஸ்லி நகர், வ.உ.சி. நகர் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி, இதுபோன்று நீண்ட கேள்வி கேட்டீர்களென்றால், எத்தனை கேள்விகளை என்னால் எடுத்துக்கொள்ள முடியும்?

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர், ஏகாங்கிபுரம், மங்கலபுரம், கிஸ்கிந்தா சாலை, சேமாத்தம்மன் காலனி, ஸ்டேட் பேங்க் காலனி, தேசிய காலனி என்று அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். அந்தப் பகுதியிலிருந்துதான் தினந்தோறும் நூற்றுக்கணக்கான பெண்கள் இந்த மையத்திற்கு வருகை தந்து, பரிசோதனை செய்து கொண்டு, சிகிச்சை பெற்றுச் செல்கின்றார்கள். ஆனால், பிரசவம் என்று வருகின்றபோது, அந்த மருத்துவமனையிலே பிரசவம் பார்க்க முடியாத சூழ்நிலை உள்ளது. தலைவர் கலைஞர் கொண்டுவந்த 108 ஆம்புலன்ஸ் வாகனத்தினை தொடர்பு கொண்டுதான்,

2017 ஜூன் 23]

இவர்களைப் பிரசவம் பார்ப்பதற்கு வேறு ஒரு மருத்துவமனைக்கு அனுப்புகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே, குக்ஸ் சாலையில் இருக்கின்ற தாய்-சேய் நல மையத்தை 10 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர், குக்ஸ் சாலையில் உள்ள தாய்-சேய் நல மையத்தில் ஒரு மருத்துவ அலுவலரும், 1 பகுதி சுகாதார செவிலியரும், ஒரு நகர சுகாதார செவிலியரும், 1 அலுவலக உதவியாளரும் பணியாற்றி வருகின்றார்கள். இவர்களைத் தவிர, 1 மருந்தாளுநர், 1 ஆய்வகப் பரிசோதகர், 1 செவிலியர் ஆகியோர் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். இந்த மருத்துவமனையில் நோயாளிகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த தாய்-சேய் நல மையத்தில் சராசரியாக 160 புற நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். மண்டலம் 6, திரு.வி.க. நகர் மருத்துவ மண்டலத்தில் எண் 40, திருவேங்கடசாமி தெரு, புளியந்தோப்பு, சென்னை-12 என்ற முகவரியில் 24 மணி நேரமும் இயங்கும் ஒரு நகர சமுதாய நல மையம்,* Urban Community Health Centre *இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனை 60 படுக்கை வசதிகளுடன், மகப்பேறு பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு, 108 ஆம்புலன்ஸ் வசதி ஆகியவற்றுடன் அனைத்து நவீன வசதிகளையும் கொண்டு 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. அந்த மருத்துவமனையில் 2 மகப்பேறு மருத்துவர், 1 மயக்க மருத்துவர், 1 குழந்தை நல மருத்துவர், 1 பொது நல மருத்துவர், செவிலியர்கள், ஆய்வகப் பரிசோதகர், மருந்தாளுநர் மற்றும் ஆலோசகர் உள்ளிட்ட பல பணியாளர்கள் உள்ளனர். இந்த மருத்துவமனையில், 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதுள்ள 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக இருக்கும்*

[2017 ஜூன் 23

இந்த மருத்துவமனையை 80 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த 24 மணி நேர மருத்துவமனையின்மூலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கின்ற பொது மக்களுக்கு மருத்துவ சேவை நிறைவு செய்யப்படுகிறது. குக்ஸ் சாலையிலுள்ள இந்த நகர தாய்-சேய் நல மையத்திற்கு மிக அருகில், 500 மீட்டர் தொலைவில்கூட அல்ல, அதற்கும் குறைவான தொலைவிலேயே மேற்கூறிய புளியந்தோப்பு 24 மணி நேர நகர சமுதாய நல மையம் உள்ளது. எனவே, குக்ஸ் சாலையிலுள்ள நகர தாய்-சேய் நல மையத்தை 10 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாயகம் கவி, கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புளியந்தோப்பு பகுதி, திருவேங்கடசாமி தெருவில் உள்ள மருத்துவமனை குறித்துக் கூறினார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனையைப் பற்றி முழுமையாக அறிந்திருப்பாரா என்று என்னால் அறிய முடியவில்லை. காரணம், அந்த மருத்துவமனை அருகிலிருக்கின்ற க்ரே நகர், காந்தி நகர், கன்னிகாபுரம், டிக்காஸ்டர் ரோடு, தாசமஹான், அலெக்சாண்டர் லேன், பென்ஷனர் லேன், பட்டாளம் மணிக்கூண்டு போன்ற பகுதிகளை உள்ளடக்கிய, 1 இலட்சம் மக்கள் வசிக்கக்கூடிய பகுதிக்கு மத்தியில் அமைந்திருக்கிறது. அவ்வளவு பெரிய மருத்துவமனையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல், 1 wheel chair, 1 stretcher, 2 scanning machines, 60 படுக்கைகள் உள்ளன. 4 மருத்துவர்கள், 7 துப்புரவுப் பணியாளர்கள், 8 செவிலியர்கள், 9 Urban Health Nurses பணியாற்றி வருகிறார்கள். இவற்றில் குறிப்பாகச் சொல்ல வருவது, புளியந்தோப்பு மருத்துவமனையில் 2 scanning machines-கள் உள்ளன. இவற்றில் ஒன்று வயிற்றுப் பகுதியை ஆராய்வதற்கும், மற்றொன்று குழந்தை வளர்ச்சி பற்றி ஆராய்வதற்கும் உள்ளன. இவற்றில் குழந்தை வளர்ச்சி பற்றி ஆராயும் கருவி பழுதடைந்து நீண்ட காலமாகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவாரா என்பது தெரியவில்லை. மேலும், அந்த மருத்துவமனையில், குழந்தையின்

2017 ஜூன் 23]

இருதயத் துடிப்பை அறியும் கருவியும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், அங்குள்ள தண்ணீர் இறைக்கும் மோட்டார் பழுதுபட்டு, நீண்ட நெடுநாட்கள் ஆகின்றன. மேலும், tube light எரியவில்லை, fan சுற்றவில்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாயகம் கவி, இனிமேல் உங்களுக்குக் கேள்வி கொடுப்பதற்கே நான் யோசனை செய்ய வேண்டும். (குறுக்கீடு) திரு. தாயகம் கவிக்கு கேள்விகள் போடுவதையே நான் யோசனை செய்ய வேண்டும். என்னை இவ்வாறு மிகவும் துன்புறுத்துகிறீர்களே? கேள்வியை முடியுங்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, A.C. இயந்திரமும் அங்கு வேலை செய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த புளியந்தோப்பு மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். அதிலும், இரவு நேரங்களில் பணிபுரிய ஒரு மகப்பேறு மருத்துவர் தேவைப்படுகிறார். எனவே, ஒரு இலட்சம் மக்கள் வசிக்கின்ற அந்தப் பகுதியில் அமைந்திருக்கின்ற மருத்துவமனையில் ஏற்கெனவே மருத்துவர்கள் பற்றாக்குறை இருக்கின்றபோது, குக்ஸ் சாலையில் வசிக்கின்ற பெண்களையெல்லாம் இந்த மருத்துவமனைக்கு வரச்சொல்வது எந்த விதத்தில் நியாயம் என்பது தெரியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்புகூர்ந்து, ஏழை எளிய மக்கள் வசிக்கின்ற குக்ஸ் சாலையில் அமைந்திருக்கின்ற தாய்-சேய் நல மையத்தை 10 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் மாநகராட்சியின் சுகாதாரத் துறையின் மூலமாக பெண்களுக்குச் சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 2016-2017 ஆம் ஆண்டில் மட்டும் 58,59,166 புற நோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

2016-2017 ஆம் ஆண்டில் பிரசவித்த தாய்மார்கள் மட்டும், 12,459 பேர். இவ்வாறு சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 1 கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, தற்போது 80 படுக்கைகளைக் கூடுதலாக அளித்திருக்கின்றோம். குக்ஸ் சாலையிலுள்ள மருத்துவமனையிலிருந்து அந்த புளியந்தோப்பு மருத்துவமனை 300 மீட்டரிலிருந்து 500 மீட்டருக்குள் இருப்பதாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு அருகில் அதிக வசதிகளோடு நகர சமுதாய நல மையம் செயல்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்த மருத்துவமனையில் கருவிகள், மோட்டார் ஆகியவை சரியாக வேலை செய்யவில்லையென்று சொல்லியிருக்கிறீர்கள். அவ்வாறு சரியில்லாமல் இருந்தால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். எங்களுக்கு அவ்வாறு தகவல் அளிக்கப்படவில்லை. அவ்வாறு தகவல் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மிக அருகில் மருத்துவமனை இருக்கும்பொழுதே இவ்வாறு குறை சொல்கிறீர்கள். சுகாதாரத் துறை அனைத்துப் பணிகளையும் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த மருத்துவமனைக்கு மிகவும் அருகில் புளியந்தோப்பு மருத்துவமனை இருக்கின்ற சூழ்நிலையில் உறுப்பினர் குறிப்பிடுகின்ற குக்ஸ் சாலையிலுள்ள தாய்-சேய் நலமையத்தை தற்போது தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த திரு.வி.க. நகர் மருத்துவமனைக்கு வருங்காலத்தில், அதிக அளவில் நோயாளிகள் வந்து, சிகிச்சை குறைவாகத்தான் அளிக்க முடிகிறது என்னும்பட்சத்தில், உரிய வசதிகள் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்பவர் சென்னையைச் சேர்ந்தவர், அந்தப் பதிலும் அவருக்குத் தான் பொருந்தும். ஆனால், நான் திருச்சிராப்பள்ளியைக் குறித்து கேள்வியைக் கேட்கின்றேன்.

2017 ஜூன் 23]

முற்பகல் 10-35

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்த இலாகாவைக் கவனித்து வருகிற காரணத்தால், அனைத்து விவரங்களையும் அறிந்திருப்பார் என்ற நிலையிலே நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். திருச்சி, 49-வது வட்டம் என்பது முழுக்க முழுக்க இஸ்லாமியர் மட்டுமே வசிக்கின்ற பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் சாலை குறுகலாக இருக்கிற காரணத்தால், பேருந்து வசதியை ஏற்படுத்த முடியவில்லை. நீண்ட காலமாக அந்தப் பகுதி மாநகராட்சிப் பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே புதிய மருத்துவமனை ஒன்று அமைக்க வேண்டுமென்ற கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு, 4, 5 ஆண்டுகள் ஆகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதைக் கவனத்தில்கொண்டு, அந்தப் பகுதியில் இருக்கும் இஸ்லாமிய மக்கள் அங்கேயே மருத்துவம் பார்த்துக்கொள்ளும் வகையிலே, புதிய மருத்துவமனையை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக இருந்தவர். கண்டிப்பாக, அந்தப் பகுதியைப் பற்றி தெரியும். இன்றைக்கு சுகாதாரத் துறையின் மூலமாக அதிகமான நிதி ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எங்களுடைய துறையைப் பொறுத்தவரையில், எங்களுக்குப் பல்வேறு பணிகள் இருந்தாலும்கூட, சுகாதாரத் துறை மூலமாக, இருக்கிற மருத்துவமனைகளை நாங்கள் சிறப்பாகப் பராமரிப்பு செய்து கொண்டு வருகிறோம். புதிதாக மருத்துவமனை தொடங்குவது என்பது சிரமமாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.